# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - செய்திமடல்
# Jaffna National College of Education - News letter




## குருதீபம்
## ගුරුදීපම්
## Gurutheepam


பெப்ரவரி - 2021 இதழ் - 20




### பீடாதிபதியின் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் செய்திமடலாகிய "குருதீபம்" இம்மாதமும் வெளிவருவது மகிழ்ச்சியளிக்கின்றது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் செயற்பாடுகள் தொடர்பான செய்திகளை பல்வேறு மட்டங்களுக்கும் கொண்டு சேர்ப்பதில் குருதீபம் கணிசமான பங்காற்றுகின்றது. அந்த வகையில் இச்செய்திப் பத்திரிகைக்காக உழைக்கும் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் மாணவ ஆசிரியர் களுக்கான முதலாம் வருட இறுதிப் பரீட்சை கற்றல் முகாமைத்துவ முறைமையினூடக (LMS) வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. ஆசிரிய கல்வியியலாளர்களின் அயராத முயற்சியினாலும் மாணவ ஆசிரியர்களின் ஒத்துழைப்பினாலுமே இவ் வெற்றி சாத்தியமாகியது. கொவிட் - 19 நாட்டில் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாக கல்வியியற் கல்லூரிகளின் மாணவ ஆசிரியர்கள் வீட்டிலிருந்தே தமது கற்றல் பணிகளைத் தொடர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ள வேளையில் எமது மாணவ ஆசிரியர்களின் அடைவு மட்டங்களை மதிப்பீடு செய்யும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்ட இப் பரீட்சையானது கல்வி அமைச்சின் மட்டத்திலும் கல்லூரிக்குப் பெரும் புகழையும் கீர்த்தியையும் ஏற்படுத்தித் தந்துள்ளது. "முடியும் என்று நினைத்தால் முடியும்" என்பதை எமது கல்லூரியின் ஆசிரிய கல்வியியலாளர்களும் மாணவ ஆசிரியர் களும் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

இப்பரீட்சை தொடர்பாகவும் சில விமர்சனங்கள் எழுந்தன. எழுகின்ற விமர்சனங்கள் யாவற்றையும் எமது உந்து சக்தியாக எடுத்து தொடர்ந்தும் நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.அந்த வகையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை ஒரு முன்மாதிரியான கல்லூரியாக நடத்திச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகத்தினர் அனைவருக்கும் எனது வாழ்த்துக் களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்.**

### கற்றல் முகாமைத்துவ முறைமையினூடாக (LMS) வெற்றிகரமாக நடைபெற்ற முதலாம் வருட இறுதிப் பரீட்சைகள் - ஜனவரி 2021

மாணவ ஆசிரியர்களுக்கான முதலாம் வருட இறுதிப் பரீட்சைகள் கல்வி அமைச்சின் LMS ஊடாக வெற்றிகரமாக நடத்தப்பட்டன. அனைத்து மாணவ ஆசிரியர் களும் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். கல்வியியற் கல்லூரி வரலாற்றில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியினால் முதன் முறையாக நடத்தப்பட்ட இந்நிகழ் நேரப் பரீட்சையானது கல்வி அமைச்சிலும் பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. இப்பரீட்சையின் வெற்றிக்காக உழைத்த கல்விக்கும் தர மேம்பாட்டுக்கும் பொறுப்பான உபபீடாதிபதி, இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்.**

### கற்றல் முகாமைத்துவ முறைமையினூடாக (LMS) உள்ளகப் பயிற்சி மாணவ ஆசிரியர்களுக்கான கற்பித்தல் பயிற்சி வகுப்புக்கள் - ஜனவரி 2021

LMS செயலியினூடாக உள்ளகப் பயிற்சி மாணவ ஆசிரியர்களுக்கான பல்வேறு கற்பித்தல் பயிற்சி வகுப்புக்கள் கிரமமான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியின் வழிப்படுத்தலில் கல்லூரியின் தொடருறு கல்விக்குப் பொறுப்பான உபபீடாதிபதி திருமதி செ.சிவபாதம் அவர்களினால் முன்னெடுக்கப்படும் இச்செயற்பாடுகளில் ஆசிரிய கல்வியியலாளர்கள் அனைவரும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். வாராந்தம் நடைபெற்று வரும் இப்பயிற்சிகளில் உள்ளகப் பயிற்சி மாணவ ஆசிரியர்கள் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

### கற்றல் முகாமைத்துவ முறைமையினூடான (LMS) மாணவ ஆசிரியர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகள் மீண்டும்...

அனைத்து ஆசிரிய கல்வியியலாளர்கள் மற்றும் மாணவ ஆசிரியர்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட விசேட நேரசூசியின் அடிப்படையில் பெப்ரவரி 01ம் திகதி தொடக்கம் வகுப்புக்கள் மீண்டும் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. கல்லூரியின் பீடாதிபதியின் வழிகாட்டலில் கல்விக்கும் தரமேம்பாட்டுக்குமான உபபீடாதிபதியின் மேற்பார்வையில் இவ்வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.


This monthly newsletter was published by Jaffna National College of Education, Kopay on 02.02.2021

***போசகர்:***

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி

***ஆலோசகர்கள்:***

செல்வி செ.செல்வமலர்

திரு. தி.ஜெயகாண்டீபன்

திருமதி. செ.சிவபாதம்

உப பீடாதிபதிகள்

***ஆசிரியர் குழு:***

திரு.சி.முகுந்தன்

திரு.ம.நிரேஸ்குமார்

திருமதி.ஜெ.உதயகுமார்

திருமதி.ஞா.கணேசநாதன்

திருமதி.சு.விக்னமோகன்

திரு.ப.இராஜேஸ்வரன்

திரு.பொ.விஜயகுமாரன்

கலாநிதி.எஸ்.பத்மராசா

திரு.அ.லோகநாதன்

திரு.து.இளங்குமரன்


***வெளியீடு***

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.
021 223 0036
Jaffnancoe@hotmail.com
www.jaffnancoe.lk

**கல்லூரி வளாகத்தில் பீடாதிபதி உள்ளிட்ட சுகாதாரத் துறையைச் சேர்ந்த பணியாளர்கள் - 07.01.2021**



**கல்வியியற் கல்லூரி விளையாட்டு மைதான அலுவலகத்தில் Smart panel - 08.01.2021**



**கற்றல் முகாமைத்துவ முறைமையினூடாக (LMS) நடைபெற்ற தைப்பொங்கல் சிறப்பு நிகழ்ச்சிகள் - 14.01.2021**




**கல்வியியற் கல்லூரி மைதான அலுவலகத்தில் தைப்பொங்கல் - 14.01.2021**









## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நடத்தும் இசைச் சங்கமம்





### மூன்றாவது சுற்றுப் போட்டி (பக்திப் பாடல்கள்) - 21.01.2021





போட்டியின் நடுவர்களான திரு.மா.பிரபாகரன், திரு.க. ஜோதிரட்ணராஜா மற்றும் திருமதி. சுதா விக்னமோகன் ஆகியோருடன் போட்டி அமைப்பாளர்கள் திருமதி வி.நரேந்திரா மற்றும் திரு.ம.நிரேஸ்குமார் ஆகியோர்...


நிகழ்நேரமுறை மூலம் இணைந்து திருமதி.கு.அருந்ததி (இசைத்துறை விரிவுரையாளர் - வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி) மற்றும் திருமதி. றஜிதா மோகன் ராஜ் (இசை ஆசிரியர் - பழைய மாணவி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - கனடாவிலிருந்து...) ஆகியோரும் இப் போட்டியின் நடுவர்களாக கலந்து சிறப்பித்திருந்தனர்.





நிகழ்வின் சிறப்பு அதிதியாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலைப் பீடாதிபதி திருவாளர் சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்.





இச்சுற்றுப் போட்டியிலிருந்து 06 மாணவ ஆசிரியர்கள் அடுத்த சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் 04 பேர் நான்காவது சுற்றுப் போட்டியில் (கீர்த்தனைகள்) பங்குபற்றி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவர்.


### நான்காவது சுற்றுப் போட்டிக்குத் தெரிவாகிய 06 போட்டியாளர்கள்





இசைத் துறை, நடனத் துறை, ஆரம்பக் கல்வி, கணிதம் ஆகிய பிரிவுகளிலிருந்து மாணவ ஆசிரியர்கள் நான்காவது சுற்றுப் போட்டிக்குத் தெரிவாகி உள்ளனர். இது இந்நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக அமைந்தது.

This monthly newsletter was published by Jaffna National College of Education, Kopay on 02.02.2021

## LMS இனூடாக நடத்தப்பட்ட யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரியர் கல்வியியலாளர்களுக்கான கூட்டம் - 01.02.2021




2021ம் ஆண்டுக்கான முதலாவது ஆசிரியர் கல்வியியலாளர் கூட்டம் 01.02.2021 மாலை 3.00 மணிக்கு கல்வி அமைச்சின் LMS தொழினுட்பத்தினூடாக நடைபெற்று பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

## அண்மையில் நியமனம் பெற்ற கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன - 30.01.2021









## “ஒரே இலக்கு ஒரே அணி” என்னும் மகுட வாக்கியத்துடன் 2021 இல் காலடி வைத்திருக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி




This monthly newsletter was published by Jaffna National College of Education, Kopay on 02.02.2021

## தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் சார்ந்த சில சொற்களுக்கான தமிழ்ப் பதங்கள்...

1. QR CODE = விரைவுக்குறி
2. 3D = முத்திரட்சி
3. BLUETOOTH = ஊடலை
4. BROADBAND = ஆலலை
5. CCTV = மறைகாணி
6. CHARGER = மின்னூக்கி
7. CYBER = மின்வெளி
8. DIGITAL = எண்மின்
9. GPS = தடங்காட்டி
10. HARD DISK = வன்தட்டு
11. HOTSPOT = பகிரலை
12. INKJET = மைவீச்சு
13. INSTAGRAM = படவரி
14. LASER = சீரொளி
15. LED = ஒளிர்விமுனை
16. MEME = போன்மி
17. MESSANGER = பற்றியம்
18. OCR = எழுத்துணரி
19. OFFLINE = முடக்கலை
20. ONLINE = இயங்கலை
21. PRINT SCREEN = திரைப் பிடிப்பு
22. PRINTER = அச்சுப்பொறி
23. PROJECTOR = ஒளிவீச்சி
24. ROUTER = திசைவி
25. SCANNER = வருடி
26. SELFIE = சுயமி
27. SIMCARD = செறிவட்டை
28. SKYPE = காயலை
29. SMART PHONE = திறன்பேசி
30. TELEGRAM = தொலைவரி
31. THUMBDRIVE = விரலி
32. THUMBNAIL = சிறுபடம்
33. TWTTER = கீச்சகம்
34. WECHAT = அளாவி
35. WHATSAPP = புலனம்
36. WIFI = அருகலை
37. YOUTUBE = வலையொளி
38. GALLERY = களரி
39. GADGET = பொறிகை
40. GAME = ஆட்டம்


8:51 pm

## வெற்றிகரமாக நடைபெற்ற முதலாம் வருட இறுதிப் பரீட்சைகள் - ஜனவரி 2021

Jaffna NCoE 1st year Internal Exam via LMS

| No | Course | Total Number of students | Total Number of students Sat the Exam | Percentage |
|---|---|---|---|---|
| 1 | Art | 25 | 25 | 100% |
| 2 | Dance | 32 | 32 | 100% |
| 3 | Music | 32 | 32 | 100% |
| 4 | English | 48 | 48 | 100% |
| 5 | Maths(E) | 18 | 18 | 100% |
| 6 | Science(E) | 22 | 22 | 100% |
| 7 | Science(T) | 58 | 58 | 100% |
| 8 | Maths(T) | 56 | 56 | 100% |
| 9 | Special Edu | 20 | 20 | 100% |
| 10 | Primary | 60 | 60 | 100% |
| | Total | 371 | 371 | |

100% மாணவ ஆசிரியர்கள் பரீட்சைக்குத் தோற்றினர்.




## தன்னிகரில்லா சேவையில் கலாநிதி பா.தனபாலன் - முதுநிலை விரிவுரையாளர் மற்றும் எமது கல்வி சாராப் பணியாளர்கள்...





கல்லூரி வீதியில் சிரமதானம்...



தற்காலிக அலுவலகம் அமைக்கும் பணியில்...



This monthly newsletter was published by Jaffna National College of Education, Kopay on 02.02.2021